Registered as a Newspaper in Ceylon

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி எண் 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி புரட்டாதி 30 ஆம் நாள் ஜ. ஆகிர் பிறை 9 (16-10-64) வெள்ளிக்கிழமை இதழ் 247



தீபாவளி பண்டிகையை
முன்னிட்டு சிறந்த பிடவைகள்
மலிவாக விற்கப்படுகிறது
உடன் விஜயம் செய்யுங்கள்!
கணேசன் ஸ்டோர்ஸ்
78, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

# லேக்ஹவுஸ்ஸ்தாபனம் அரசாங்க கார்பரேஷனாகியது

## பத்திரிகை கூட்டுஸ்தாபனமசோதா பார்லிமெண்டில்சமர்ப்பிக்கபட்டது

### நவ. 5-ல் இரண்டாவது வாசிப்பு நடைபெறும்

கொழும்பு, வியாழன்

லேக்ஹவுஸ் பத்திரிகைகளை எடுத்து கூட்டு ஸ்தாபனம் ஒன்றின் பொறுப்பில் விடுவதற்கான மசோதாவை நீதிமந்திரியின் பார்லிமெண்டரிக் காரியதரிசி, இன்று பிற்பகல் ஜனப்பிரதிநிதிகள் சபை கூடியபோது சமர்ப்பித்தார்.

அசோசியேற்றட் நியூஸ்பேப்பர்ஸ் ஸ்தாபனத்தாரால் பிரசுரிக்கப்பட்டுவரும் தினசரிகளாகிய டெயிலி நியூஸ், ஒப்சேவர், ஞாயிறு பதிப்புகள், தினமின, ஜனதா, தினகரன் முதலான பத்திரிகைகளும் மற்றும் இதே ஸ்தாபனத்தினால் பிரசுரிக்கப்படும் 7 வெளியீடுகளான பேர்குசன்ஸ் குறிப்புகளும், லங்கா ஜனபொத்த, மிதிர, நவயுகய, சரசவிய, சிலுமின முதலியனவற்றையும் அரசாங்கக் கூட்டு ஸ்தாபனம் பொறுப்பேற்று நடத்தவேண்டுமென்று கூறும் பத்திரிகை மசோதா இன்று பிற்பகல் மக்கள் சபையில் நீதியமைச்சின் பாராளுமன்றக் காரியதரிசி திரு. தயா பாஸ்குவலினால் சமர்ப்பிக்கப்பட்டது.

குறிக்கப்பட்ட ஸ்தாபனத்தைப் பொறுப்பேற்று நடத்துவதற்காக 5 நிர்வாகிகளைக் கொண்ட ஒரு சபையை மந்திரி தெரிவுசெய்வார். இவர்களுள் பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டவர்களையும், ஊழியர்களையும் மந்திரி சேர்த்துக்கொள்வார். இந்த பத்திரிகை ஸ்தாபனத்தில் வேலைசெய்யும் உத்தியோகத்தர்களும் தொழிலாளர்களும் குற்றமுறைக் கோப்பு விதிகளுக்காக அரசாங்க ஊழியர்களாகக் கருதப்படுவார்கள். இலங்கையில் செய்திகளை விநியோகம் செய்யும் இலங்கை பிரெஸ் ரஸ்ட், பி. ரி. ஐ., பி. ரி. சி. முதலிய செய்தி ஸ்தாபனங்களிலும் ஏகபோக உரிமை ஏரிக்கரைப் பத்திரிகை ஸ்தாபனத்தாருக்கே உண்டு. இவற்றையும் இனிமேல் கூட்டு ஸ்தாபனமே பொறுப்பேற்கும்.

**நவம்பரில் இரண்டாவது வாசிப்பு**

இந்த மசோதாவின் இரண்டாவது வாசிப்பு அநேகமாக தற்பொழுது லண்டனில் இருக்கும் பிரதம மந்திரி சிறிமாவோ பண்டாரநாயக்கா இலங்கை வந்தபின்னர் அடுத்த மாதம் 5ந் திகதி நடைபெறலாமெனவும் தெரியவருகிறது.

**பார்லிமெண்டரிக் குழு கூடியது**

மக்கள் சபையில் இந்த 40 பக்கங்களடங்கிய மசோதாவை சபையில்சமர்ப்பிப்பதற்கு முன்னதாக அரசாங்க பாராளுமன்றக் குழுவினர் இந்த மசோதாவுக்குஏகமனதாக ஆதரவுதெரிவித்தனர். இந்த மசோதாவில் 78 பகுதிகள் அடங்கியிருக்கின்றன. இந்த மசோதாவின் 22வது பகுதியின்படி இந்தக் கூட்டு ஸ்தாபனத்தின் முதல் ஒரு கோடியாகும். மந்திரியின் அனுசரணையுடன் இந்த முதலீட்டைக் காலக்கிரமத்தில் கூட்டுக்கொள்வதற்கும் மசோதாவில் இடமளிக்கப்பட்டுள்ளது.

1956-ம் ஆண்டு 30ந் திகதிக்கும் குறிப்பிட்ட திகதிக்குமிடையில் ஏரிக்கரை ஸ்தாபனத்தில் கடமையாற்றிய எந்த ஊழியரும் தொழிற்சங்க நடவடிக்கைக்காக நிற்பாட்டப்பட்டிருந்தாரென்று தொழிற் கமிஷனரால் நிரூபிக்கமுடியுமானல் அப்பேற்பட்ட ஊழியர்கள் யாவரும் உத்தேசிக்கப்பட்ட கூட்டு ஸ்தாபன நிர்வாகிகளால் அவர்கள் விரும்பும் விதிகளுக்கும் ஒழுங்குகளுக்குமேற்பத் திரும்பவும் வேலைக்கு எடுக்கப்படலாமெனவும் ஏரிக்கரை மசோதாவின் ஒரு ஷரத்து கூறுகின்றது.

---

## இரண்டுதட்டு பஸ்களை யாழ்ப்பாணம் அனுப்பாவிடில்...

### ...இ. போ. ச. தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வர்?

யாழ்ப்பாணம், வெள்ளி

போக்குவரத்து மந்திரி திரு. அனில் முனசிங்கா இங்கு வந்திருந்தபோது யாழ்ப்பாணத்தில் சேவையில் ஈடுபடுத்தப் புதிய இரண்டு தட்டு பஸ்கள் அனுப்புவதாக வர்க்குறுதியளித்திருந்தபடி, இரண்டு தட்டு பஸ்கள் அனுப்பப்படாவிடில் யாழ்ப்பாண இ. போ. ச. தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்வார்களென அறியப்படுகிறது.

தமிழரசுத் தலைவர்கள் சிலரின் ஆட்சேபத்தின் பெயரில் யாழ்ப்பாணத்துக்கு இரண்டு தட்டு பஸ்களை அனுப்பாதிருக்க முடிவு செய்திருப்பதாக தமக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் இதனைத் தொடர்ந்து தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வதற்கு யோசித்து வருகிறார்களெனவும் அகில இலங்கை ஐக்கிய மோட்டார் தொழிலாளர் சங்க யாழ். மாவட்ட பிரதிநிதி திரு. ஆர். ஆர். தர்மரத்தினம் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்

(6-ம் பக்கம் பார்க்க)

---

கைகளைக்கட்டி, நிர்வாணமாக்கி

## தொழிலாளியை நட்ட நடுநிசியில் பொலிசார் தாக்கினராம்

### உடன் நடவடிக்கை எடுக்குமாறு தொழிற்சங்கம் மந்திரிக்கு மகஜர்

யாழ்ப்பாணம், வெள்ளி

இலங்கை போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போவைச் சேர்ந்த பஸ் ஊழியர் வேலை நிறுத்தம் செய்ததைத் தொடர்ந்து, காங்கேசன்துறை உதவி பொலிஸ் சுப்ரிண்டன்ட் நடத்திய விசாரணையின் அறிக்கையை கட்டி வைத்துவிடாது வேண்டிய நடவடிக்கை எடுக்கும்படி அகில இலங்கை ஐக்கிய மோட்டார் தொழிலாளர் சங்க யாழ். பிரதேசக் கிளையினர் போக்குவரத்து மந்திரி திரு. அனில் முனசிங்காவைக் கேட்டுள்ளார்கள்.

பஸ் டிப்போவிற்குள் இரவு ஒரு மணிக்கு பொலிஸார் காவலாளியின் அனுமதியின்றி உட்சென்று அங்குள்ள ஒரு ஊழியரை அடித்து, அவரது இரு கைகளையும் முதுகிற்குப் பின்னால் கட்டி, நிர்வாணமாகப் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்றதையும், அத்தருணத்தில் வேறு ஒரு ஊழியர் நிர்வாணமாகக் கொண்டு செல்லாது உடுத்திக்கொண்டு செல்லுமாறு கூறியதற்காக அவரையும் தாக்கியதற்காகவுமே இந்த வேலை நிறுத்தம் நடைபெற்றது என்று மேலும் இச்சங்கத்தினர் மந்திரிக்குத் தெரிவித்துள்ளார்கள்.

---

## மேலும் "டபிள்டெக்கர்" இப்போதைக்கில்லை

யாழ்ப்பாணம், வெள்ளி

புதிதாக இலங்கைக்கு இறக்குமதியாக்கப்பட்டுள்ள 'டபிள் டெக்கர்' பஸ்களில் சிங்கள ஸ்ரீ இலக்கம் பொறிக்கப்பட்டுள்ளதால் இந்த சிங்கள ஸ்ரீ 'டபிள் டெக்கர்' பஸ்கள் இங்கு வரவேற்கப்படுமோ என்ற சந்தேகம் காரணமாக யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்படவிருந்த புதிய 'டபிள் டெக்கர்' பஸ்கள் இப்போதைக்கு இங்கு அனுப்பப்படமாட்டாதென அறியப்படுகிறது.

---

## யோகர் ஆச்சிரமத்தில் மண்டலாபிஷேகம்

யாழ்ப்பாணம், வெள்ளி

கொழும்புத்துறையில் யோகர் சுவாமிகள் ஆச்சிரமத்தில் வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8மணிமுதல் பகல் 12 மணிவரை மண்டலாபிஷேகமும் மகேசுரபூசையும் நடைபெறும்.

---

## பரந்தன் தொழிற்சாலையில் நேற்று முதல் வேலை நிறுத்தம்

### தனிப்பட்டவர் கைகலப்பே காரணம்?

கச்சாய், வியாழன்

பரந்தன் ரசாயன தொழிற்சாலையில் நேற்று பகல் ஒரு மணி தொடக்கம் வேலைநிறுத்தம் நடைபெறுகிறது.

இந்த வேலைநிறுத்தம் தனிப்பட்ட இருவர்களுக்கிடையில் ஏற்பட்ட காரணங்களுக்காக நடத்தப்பட்டுவருகிறதென்ற காரணத்தால் தொழிற்சாலை அதிகாரிகள் எதுவித நடவடிக்கையும் எடுக்க மறுத்துவிட்டனர். பரந்தன் ரசாயனத் தொழிற்சாலையில் வேலைசெய்யும் போர்மன் திரு. என். மகேந்திரனுக்கும் அந்தத் தொழிற்சாலைப் போசனசாலை மனேஜர் திரு. எஸ். வரதராசாவுக்கும் ஏற்பட்ட கைகலப்பின் காரணத்தினாலேயே இந்த வேலைநிறுத்தம் ஏற்பட்டுள்ளதென்றும் தெரியவருகின்றது. இந்த வேலைநிறுத்தத்தில் அநேகமாக எல்லா ஊழியர்களும் பங்குபற்றியுள்ளார்களென்றும் ஒரு தொழிற்சங்கப் பிரதிநிதி தெரிவித்தார்.

ராதா குரு பற்பொடி




பற்களை
வெண்மையாக்கி, வாய்
நாற்றத்தைப் போக்கி, பற்களுக்கு பூரணமான பாதுகாப்பளிக்கிறது. பல்வலி, பல் அரணை, முரசு கரைதல் முதலிய பல் சம்பந்தமான நோய்களுக்கு
நிவாரணமளிக்கும்.

தயாரிப்பாளர்கள்: ராதா புறடக்ஸ்

விநியோகஸ்தர்கள்: எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி
போன்: 541.
53, கே.கே.எஸ்.றோட், யாழ்ப்பாணம். 160, செட்டியார் தெரு, கொழும்பு.

### மணிவாக்கு

பிறருக்காக காந்திஜி கூறிய ஒவ்வொரு அறிவுரையையும் அவர் அப்படியே தாமும் அனுஷ்டித்தார். எப்பொழுதும், அவர் தாம் முதலில் ஒன்றைச் செய்த பிறகே பிறரையும் அதைச் செய்யுமாறு கூறுவார்.

— நேருஜி


# ஈழநாடு

EELA NADU

EELA NADU National Tamil Daily. Post Box 49, Jaffna
Telegram: EELA NADU Jaffna
Phone 389

[illegible] குரோதி ஆண்டு புரட்டாதி மீ 30 உ (16-10-64)


## கிரிதரை ஆலே விவகாரம்

கிரிதரை ஆலே விவகாரம் சம்பந்தமாக எதிர்க்கட்சியினர் கொண்டுவந்த ஒரு பிரேரணை ஜனப்பிரதிநிதிகள்சபையில் தோல்வியடைந்துவிட்டது. 'கிரிதரை ஆலே' விவகாரம் இத்துடன் முடிவடைந்துவிடும் என்பது சந்தேகமே.

கிரிதரை ஆலே விவகாரம் பார்லிமெண்டில் பலதடவைகள் கிளப்பப்பட்டிருக்கின்றன. சென்றமாதம் 30-ந்திகதி ஜனப்பிரதிநிதிகள்சபையில் இப்பிரச்னையை எதிர்க்கட்சியினர் கிளப்பியபொழுது, அதை நீதிமன்றத்துக்கு எடுத்துச் செல்லுமாறும், நீதிமன்றத்தின் தீர்ப்பை தாம் ஏற்றுக் கொள்வதாகவும் நிதிமந்திரி டாக்டர் என். எம். பெரேரா தெரிவித்தார். இத்துடன் இது முடிவடைந்துவிடுமென எதிர்பார்க்கப்பட்டது. எதிர்க்கட்சியினர் விடவில்லை. நேற்று முன்தினம் மீண்டும் ஜனப்பிரதிநிதிகள் சபையில் இது கிளப்பப்பட்டது. நீதிமன்றத்தில் தீர்க்கப்பட வேண்டிய இவ்விஷயம் சம்பந்தமான விவாதத்தில் தாம் கலந்து கொள்ளவிரும்பவில்லையெனத்தெரிவித்து, ஆலேயுடன் சம்பந்தப்பட்ட டாக்டர் பெரேரா சபையிலிருந்து வெளியேறிவிட்டார். இப்பிரச்னை இனியும் நீதிமன்றம் செல்லுமா என்பது பொறுத்திருந்து பார்க்க வேண்டிய விஷயம். என்றாலும் நேற்று முன்தினம் கிரிதரை ஆலே விவகாரம்பற்றி ஜனப்பிரதிநிதிகள்சபையில் நடைபெற்ற விவாதம் இந்நாட்டின் ஜனநாயகம் பாதுகாக்கப்படுகிறதென்பதற்கு உதாரணமாக விளங்கியது. கிரிதரை ஆலே விவகாரம் சம்பந்தமாக ஆராய பார்லிமெண்டரித் தெரிவுக் கமிட்டியொன்று நியமிக்கப்பட வேண்டுமென்பதுதான் எதிர்க்கட்சியினர் கொண்டுவந்த பிரேரணையாகும். இப்பிரேரணை தோல்வியடைந்துவிட்டபோதிலும் பார்லிமெண்டில் இனியும் இப்பிரச்னை அடிக்கடி தலையிடாமலிருக்கும் என எதிர்பார்க்க முடியாது.

எதிர்க்கட்சியினரின் பிரேரணை தோற்கடிக்கப்பட்டுவிட்டதால் இது தீர்ந்துபோன விஷயம் என்று அரசாங்கக் கட்சியினரோ பிரச்னை சம்பந்தப்பட்ட டாக்டர் என். எம் பெரேராவோ அவரது லங்கா சமசமாஜக்கட்சியினரோ அலட்சியமாக இருப்பது பொது வாழ்வில் ஈடுபட்டுள்ள அவர்களுக்கு நிச்சயம் நல்லதல்ல. கிரிதரை ஆலே விவகாரம் பார்லிமெண்டரி ஒழுங்கு முறைகள் சம்பந்தப்பட்டதோ, சட்ட சம்பந்தமானதுமட்டுமோ அல்ல. மக்களின் நம்பிக்கையையும் மதிப்பையும் பெறும் பொது வாழ்வில் ஈடுபட்டுள்ளவர்கள் சம்பந்தப்பட்ட முக்கியமான விஷயமாகும். டாக்டர் என். எம். பெரேராவும் அவர் தலைமை தாங்கும் லங்கா சமசமாஜக் கட்சியும் நேர்மையிலும் ஒழுங்கத்திலும் கட்டுப்பாட்டிலும் திறமையிலும் மக்களின் நன்மதிப்பை அதிகம்பெற்றது. இக்கட்சியினர் சேர்ந்து கூட்டு அரசாங்கம் அமைத்த பின்னரே நாட்டின் நிர்வாகத்தில் புத்துணர்ச்சியும் சீரும் ஏற்பட்டுள்ளதாக மக்கள் பொதுவாகக் கருதுகின்றனர். இச்சமயத்தில் தான் 'கிரிதரை ஆலே' ஒரு பிரச்னையாகக் கிளம்பியிருக்கிறது. இந்த விவகாரத்தை பார்லிமெண்டின் பெரும்பான்மைப் பலத்தைக்கொண்டு நசுக்கிவிடலாமென நினைத்தால் அது சமசமாஜக் கட்சியினர் இதுவரை காலமும் பெற்ற நற்பெயருக்குக் களங்கமாகவே முடியும்.

'கிரிதரை ஆலே' விவகாரம் நீதிமன்றத்துக்குக்கொண்டு செல்லப்பட்டாலும்சரி, கொண்டுபோகப்படாவிட்டாலும் சரி இப்பிரச்னை சம்பந்தமாக டாக்டர் என். எம். பெரேரா தமது நிலையை தெளிவாக்குவது அவருக்கு நன்மையையே செய்யமுடியும். பிரச்னையை நீடிக்க விடுவது எதிர்க்கட்சியினருக்கு மட்டுமல்ல வீண் பேச்சுக்களுக்கும் தவறான அர்த்தங்களுக்குமே வழி வகுக்கும். எதிர்க்கட்சியினரின் புகார்களுக்குத் தகுந்த முறையில் பதிலளித்து தனது நிலையைத் தெளிவு படுத்துவதன் மூலம் டாக்டர் பெரேரா மக்கள் மத்தியில் தமக்குள்ள மதிப்பை உயர்த்திக்கொள்ள முடிவதுடன் 'நேர்மையானவர்' என்ற பெயரையும் நிலைநாட்டமுடியும்.

# தமிழன் பண்பாட்டுக்கு புத்துயிர் அளிக்கும் தமிழிசை

## விவேகானந்த சபையாரின் தமிழிசைவிழா நாளை ஆரம்பம்

கொழும்பு, வியாழன்

"இறைவன் நாதவடிவாயும் இறைவிஇசை வடிவானவ ளென்றும் அருணகிரியார், அபிராமிப்பட்டர் முதலியோர் கூறியிருக்கிறார்கள். நமதுசமய குரவரை இறைவன் பூமாலை சூட்டும்படி கேட்கவில்லை. பாமாலை சூட்டவே பணித்தனர்."

இவ்வாறு நீதியரசர் சைவ சிகாமணி திரு. பொன். ஸ்ரீஸ்கந்தராஜா கொழும்பு விவேகானந்தசபையினரின் தமிழிசை விழாவுக்கு வழங்கிய வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இம்மாதம் 17-ம் திகதிசனிக்கிழமையும் 18-ம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் கொழும்பு விவேகானந்த சபையினர் தமிழ் இசை விழா விவேகானந்த சபை மண்டபத்தில் பத்தில் நடைபெறுகிறது.

நீதியரசர் திரு. ஸ்ரீஸ்கந்தராஜா தமது வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

முன்னோர், தமிழ் என்னும் இனிமை மொழியை இயல் இசை நாடகம் என மூவகையான பிரிவுகளாக ஆராய்ச்சி மூலம் அனுபவம் செய்துவந்தனர். அவர்கள் இசையிலும் இசைக்கருவிகளிலும் உலகில் ஒப்பாரும் மிக்காருமில்லா தகை தேர்ச்சியாளர். அவ்வாறே நாடகமும். தமிழ் இசையின் அருமை பெருமையை உணர்ந்த விபுலாநந்த அடிகளார் நம் வாழ்நாள் முழுவதும் ஆராய்ச்சி செய்து "யாழ்நூல்" என்னும் தமிழனின் பண்பாட்டின் திறமையைக் காட்டும் நூலை எமக்களித்துள்ளார்.

தமிழனின் பண்பாட்டுக்குப் புத்துயிரளிக்கும்படி விவேகானந்தசபையார் வருடாவருடம் தமிழ் இசைவிழா நடாத்துவது மகிழ்ச்சிதருகிறது.

### சைவமும் தமிழும்

தமிழிசைவிழா சம்பந்தமாக விவேகானந்தசபையார் விடுத்துள்ள அறிக்கையில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:

உலக வரலாற்றிலே, இப்பொழுது ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டுக் கொண்டு வருகின்றதை உற்று நோக்கும் பொழுது, மனிதனுடைய அறிவும் ஆற்றலும் எவ்வளவு தூரம் விரிவடைந்துள்ளதென்பதை எடுத்துக் காட்டுவதாயிருக்கின்றது.

அவ்வாறு விரிவடைந்ததனால், அவனுடைய சிந்தனையிலே, தன்மான உணர்ச்சி எண்ணங்கள் தோன்றி; தனது இனம், நாடு, மொழி, பண்பாடு ஆகியவற்றை அந்நியர்கள் அடிமைப்படுத்தி, ஆட்சி செலுத்த தனது இனத்தை அடிமைகளாக, அனாதைகளாக நாடற்றவர்களாக ஆக்கப்பட்டுள்ளதை எதிர்த்து கிளர்ச்சி செய்து இன்னல்கள் பலஏற்று இறுதியில் தன்னாட்சி பெற்றுத் தனிக்கொடி உயர்த்தித் தனது மொழி, கலை, கலாச்சாரம் ஆகியவற்றை நாளொரு வண்ணமாக வளர்த்துச் சுதந்திர மனிதனாக தலை நிமிர்ந்து சீருடனும் சிறப்புடனும் வாழ்ந்து வருகின்றதைநாம் காணுகின்றோம்.

அந்த நிலை தமிழர்களைப் பொறுத்தவரையில் இன்னும் ஏற்படவில்லை என்பதை வருத்தத்துடன் கூறத்தான் வேண்டி இருக்கின்றது. அவர்களுடைய பண்டைய வரலாற்றையும், தமிழ் மொழியின் தொன்மையையும் எத்தனையோ அறிஞர்களும் பெரியவர்களும் புலவர்களும் சைவ சமயக் குரவர்களும் தமிழிசைப்பாவலர்களும் காலத்திற்குக் காலம் தோன்றிப் பல வழிகளிலும் எடுத்துரைத்துக் கொண்டுதான் வருகின்றார்கள். ஆனால் பயன் என்ன?

சைவசமயத்திற்கு எதிராக வேற்று மதத்தவர்கள் பிரசாரம் செய்த வேளைகளில் எல்லாம், அவர்களை முறியடிப்பதற்குச் சைவ ஞானிகளும் தொண்டர்களும் சைவசமயக் கோட்பாடுகளையும் துட்பங்களையும் சிற்றூர் பேரூர் எங்கும் இசைமூலம் எடுத்துச் சொல்லி வெற்றி பெற்றதைச் சரித்திரவாயிலாக அறிகின்றோம்.

ஈழத்திலே சைவசமயத்திற்கு எதிராக எத்தனையோ விதமான ஆபத்துக்கள் சூழ்ந்து கொண்டு வருகின்றன. இதைத் தடுத்து நிறுத்தவேண்டும். இல்லாவிடில் சைவசமயத்தையும் புதைபொருள் போல ஆராய வேண்டியநிலை ஏற்பட்டு விடலாம். சைவ சமயத்திலிருந்து தமிழ்மொழியைப் பிரிக்க முடியாதவாறு இரண்டும் இயற்கையாகவே ஒன்றாகவுள்ளது. ஆகவே ஒவ்வொரிடமும் சைவசமயப் பற்றும் தமிழ்மொழிப் பற்றும் மடை திறந்த வெள்ளம் போல் பெருக்கெடுத்தோட வேண்டும்.

ஈழத்திலே சைவத்தையும் தமிழ் மொழியையும் பேணிப் பாதுகாத்து வரும் மாபெரும் நிறுவனமாகிய கொழும்பு விவேகானந்த சபை, தமிழிசையின் மூலம் சைவத்தை வளர்ப்பதற்காக ஆண்டுதோறும் தமிழிசை விழாவை; எத்தனையோ இடையூறுகளையும் உறுதியுடன் தாண்டி மிகவும் சிறப்பாக நடத்தி வருகின்றது. இதற்கு எமது கலைஞர்கள் பூரண ஆதரவு அளித்து வருவதையிட்டு அவர்களைப் பாராட்டுகின்றோம்.

இந்தச் சந்தர்ப்பத்தில்எமது சபை ஆற்றிவரும் பணிகளை இங்கு குறிப்பிடுவது மிகையல்ல என்று எண்ணுகின்றோம்.

ஈழம் வாழ் தமிழ்ச் சிறுவர்களின் உள்ளங்களில் சைவ சமயத்தின் தத்துவங்களும் நெறிமுறைகளும் ஆழமாக வேரூன்றச் செய்வதில் முக்கிய கவனமெடுத்து ஆண்டுதோறும் அகில இலங்கைச் சைவசமயப் பாடப் பரீட்சை நடாத்தி, சித்தியடைந்தவர்களுக்குச் சான்றிதழ்களும், மிகத் திறமை காட்டியவர்களுக்குத் தங்க, வெள்ளிப் பதக்கங்களும் வழங்கிவருகின்றது. இந்த ஆண்டு—மாண

(5-ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

முக்கியமான தபால் அவசரமாகச் சேரவேண்டுமானால், நமது தபால் சர்விஸை நாம் நம்பமுடியாது. போட்டதபால் சிலசமயம் சேரவே சேராது. அல்லது பல நாள் கழித்துச் செல்லும். தந்திகள் படுகிற பாட்டில் தபால் எம்மாத்திரம்!

இத்துடன் ஒப்பிடுகையில் நமது ரயில்வே சர்விஸ் எவ்வளவோ தேவலாம். ரயில்வே 'பார்சல் லெட்டர்'ராக அனுப்ப அதிக செலவாகும்தான். என்றாலும், மறுநாள் காலை கட்டாயமாகக் கிடைத்துவிடுவது உறுதி. அதனால் கொழும்பிலிருந்து இதை எழுதி, ரயில்வே பார்சலாக அனுப்பி வருகிறேன்.

* * *

சென்ற திங்கட்கிழமையன்று கோட்டை பார்சல் ஆபீஸில் கடிதத்தைக் கொடுத்துவிட்டு ஒரு நண்பருடன் காலிபேஸ் பக்கம் சென்றேன். அரசாங்க (செக்ரடேரியட்) தலைமைக்காரியாலய வாசலில் வாழைமரங்களும் தோரணமும் கட்டியிருந்தனர். வாசற்பக்கம் அதிகக் கூட்டம். என்றும் காணாத இக்காட்சியைக் கண்டு அழையாவிருந்துபோல் உள்ளே சென்றேன். பேப்பர்காரனுக்கு எங்கும் எப்போதும் செல்லவும் யாருடனும் பேசவும் விசேஷ சலுகை உண்டுதானே!

சரஸ்வதி பூசை மந்திரம் ஒலிபெருக்கிமூலம் கணீரென்று வாக்கு சுத்தமாக ஒலித்தது. முன் மண்டபம் தாங்காமல் கூட்டம். எல்லாரும் பயபக்தியுடன் நின்றுகொண்டிருந்தனர். தமிழர் மட்டுமல்ல பல சிங்கள பௌத்தர்களும் அங்கு நின்று வழிபட்டதைக் காண மகிழ்ச்சியாக இருந்தது. சரஸ்வதி தேவி இந்துக்களையும் பௌத்தர்களையும் சேர்த்து ஒற்றுமைப்படுத்தினர் அங்கு வேலை பார்க்கும் பௌத்தர்களையும் விசேஷமாக அழைத்ததாக நிரந்தரக்காரியதரிசி பாலசிங்கம் தெரிவித்தார். பலே பலே!

மாலையிலே ஒரு மாமரத்திலே சிங்களசிப்பந்திகள் மாவிலையைப் பறித்துக்கொண்டிருந்தனராம். ஓர் அன்பர் எதற்காக மாவிலை என்று கேட்டதற்கு "மல்பூஜா" (புஷ்பபூஜை)க்கு என்று சொல்லி, வாழை, தோரணம் எல்லாம் கொண்டு வந்து, அவர்களே அந்த மண்டபத்தை அலங்கரித்ததாகவும் அறிந்தேன்.

* * *

அரசாங்கத் தலைமைக் காரியாலயத்திலே சரஸ்வதிபூஜை, கும்பம் படம் வைத்து சைவ முறைப்படி நடப்பது, ஓர் அபூர்வ சம்பவமாகும். அன்னிய ஆட்சியிலே இது நினைக்கவும் முடியாத காரியமென்று, 'ரிலிஜியஸ் டைஜஸ்ட்', 'ஆத்ம ஜோதி' ஆசிரியரும், முன்னாள் ரயில்வே பெரிய அதிகாரியுமான அன்பர் இராமச்சந்திரா சரியாகச் சொன்னார்கள்.

ஐம்பது ஆண்டுகளுக்குமுன், யாழ்ப்பாணத்திலே முற்றிலும் சைவ மாணவர்களே படிக்கும் கல்லூரிகளிலும்ஒரு கிறிஸ்தவ இன்ஸ்பெக்டர் சரஸ்வதிபூஜையன்று வந்து பூஜை எதுவும் நடக்கப்படாதென்று கண்காணிப்பாராம். இப்போது அரசாங்கத் தலைமைக் காரியாலயத்திலும் சரஸ்வதி பூஜை நடப்பதைப் பார்க்கையில் காலம் எவ்வளவு மாறி வருகிறதென்பது தெரிகிறதென்றுவகுறிப்பிட்டார் அவர்.

"சக்தி அல்லது அன்னை வழிபாடு உலகனைத்தும் பரவியுள்ளது. எல்லாவற்றையும் இயக்குவது சக்தியே. சக்தியால் ஆகாதது ஒன்றுமில்லை" என்று கூறி, தாம் ஜப்பான், ஜெர்மனி, அமெரிக்கா முதலிய நாடுகளுக்கும் செல்ல முடிந்த ஒரு ரகசியத்தை அவர் அக்கூட்டத்தில் வெளியிட்டார்.

தினசரி தாம் "திரிசதி" என்னும் மந்திர ஜபம் 400 முறை

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

செய்வதாயும், இரண்டு லட்ச மந்திர ஜபத்தின் பின் தமக்கு ஜப்பானுக்குச் செல்லும் வாய்ப்புக் கிடைத்ததென்றும், 5 லட்சம் மந்திரம் ஜபமானதும், ஜெர்மனிக்குச் செல்ல முடிந்ததென்றும் சொன்னார். சர்வகலாசாலைப் படிப்பு எனக்குக் கிடையாது. என்றாலும் ஜெர்மனியிலே பல சர்வகலாசாலைப் பேராசிரியர்கள் வந்து, என் பேச்சைக்கேட்டு பெரிதும் பாராட்டினர். இதெல்லாம் என் கெட்டித்தனமல்ல. "பராசக்தியின் பேருள் தான்" என்று அடக்கமாகச் சொன்னது பலரது மனதையும் தொட்டது.

* * *

"வாழ்க அந்தணர் ........" என்ற தேவாரம் உள்ளிட்டு பஞ்சபுராணத்தை அன்பர் சிவஞானம் இனிமையாகப் பாடினார். சகலகலா வல்லி மாலையுடன் பூசை முடிந்து, குருக்களவர்கள் விபூதிபிரசாதமளித்தார். சிங்களவர்களும் வாங்கி அணிந்தனர். மேலான வீணை, நடன, கலை நிகழ்ச்சிகளுக்குப் பின், நன்றிகூறிய பாலசிங்கமவர்கள், இது ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சம்பவமென்று குறிப்பிட்டார்கள். முதலில் தேவாரம், புராணம் பாட, "ஹரஹரமகாதேவ" கோஷத்துடன் விழா இனிது முடிந்தது.

செவ்வாயன்று பூசை கடல் தொழில் காரியாலயத்திலும், புதனன்று அரசாங்க புதிய காரியாலயத்திலும் விமரிசையாக நடந்தது. இந்து வாலிபர் சங்கத்தாரே முன்வந்து இதற்கு ஒழுங்கு செய்ததாயும், இனி பல இந்துப் பெருநாட்களையும் இவ்விதமே கொண்டாட உத்தேசித்திருப்பதாகவும் அறிந்தேன்.

இந்தப் பூஜைக்குப்பின், அரசாங்கக் காரியாலயங்களில் வேலை பார்க்கும் தமிழ் அன்பர்களுக்கு புதிய மனோபலமும் உற்சாகமும், நம்பிக்கையும் ஏற்பட்டிருப்பின அதில் வியப்பில்லை.

* * *

உமையாலதுருவமில்லை உலகாலதுடையதில்லை, நமையெலாமுடையராவர் நன்மையே தீமையில்லை, கமையெலாம் உடையராகிக் கழலடி பரவும் தொண்டர்க்கு, அமைவிலா அருள் கொடுப்பார் ஐயன் ஐயாறனார்க்கே.

—திருநாவுக்கரசர்.

1964-ம் ஆண்டுக்கு

# டாக்டர்கிங் சமாதான 'நோபல்' பரிசு பேற்ருர்

## தலைசிறந்த சிவில்உரிமை போராட்டத் தலைவர்

ஸ்டொக்ஹோம், அக். 15

1964-ம் ஆண்டுக்கான சமாதான நோபல்பரிசு, தலைசிறந்த அமெரிக்க சிவில் உரிமைஇயக்கத் தலைவரான டாக்டர் மார்ட்டின் லூதர் கிங்குக்கு வழங்கப்பட்டிருக்கிறது. டாக்டர் கிங்குக்கு வயது 35. இதுவரை இவ்வளவு வயதில் நோபல் பரிசைப் பெற்றவர் எவருமில்லை.

டாக்டர் கிங் அஹிம்சைப் போராட்டத்தின் மூலம் சிவில் உரிமைக்காக பாடுபட்டு வருபவர். தமக்கு இப்பரிசு வழங்கப்பட்டிருப்பதாகச் செய்தி வந்தபோது அவர் ஆஸ்பத்திரியில் வைத்தியப் பரிசோதனைக்காகத் தங்கியிருந்தார்.

தமக்குக் கிடைத்த இப்பரிசு நீக்ரோக்களின் சமஉரிமையை உலகம் அங்கீகரிக்கிறது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு எனவும் பரிசுத் தொகையான ரூ. 2,50,000ஐயும் சிவில் உரிமைப் போராட்ட இயக்கத்துக்கே பூரணமாகப்பயன்படுத்தப்போவதாயும் டாக்டர் கிங் தெரிவித்தார்.

டாக்டர் கிங், சமாதான நோபல்பரிசு பெற்ற 3-வது நீக்ரோ தலைவராகும். 1950-ம் ஆண்டில் தற்போது ஐ. நா. உதவிக் காரியதரிசியாக இருக்கும் டாக்டர் ரால்ப்பஞ்சுக்கும் 1962-ம் ஆண்டு ஆபிரிக்க நீக்ரோ தலைவர் அல்பர்ட்லுதிலிக்கும் நோபல் சமாதானப் பரிசு கிடைத்தது. இவர்கள் நீக்ரோ இனத்தினர்.

டாக்டர் கிங்கை டாக்டர் பஞ்ச் இதுசம்பந்தமாகப் பாராட்டியிருக்கிருர்.

# கிழக்கு பாகிஸ்தானில் ஆலைத் தொழிலாளர் கலகம்

## பலர் மாண்டனர்

டாக்கா, அக். 15

கிழக்கு பாகிஸ்தானில் சணல் ஆலைத் தொழிலாளரிடையே ஏற்பட்ட கலவரத்தைத் தொடர்ந்து பொலிசார் சுட்டதில் 5 பேர் கொல்லப்பட்டனர்.

குறிப்பிட்ட ஒரு ஆலையில் வேலைநிறுத்தம் நடைபெற்றதென்றும், வேலைக்குச் சென்றவர்கள் மீது வேலைநிறுத்தக்காரர்கள் தாக்குதல் நடத்தினர் என்றும் அறிவிக்கப்படுகிறது. இந்த வேலைநிறுத்தம் மேலும் 4 சணல் ஆலைகளுக்குப் பரவியது.

ஆறு ஒன்றைக் கடந்து வேலைக்கு வந்த தொழிலாளர்கள் மீது வேலைநிறுத்தக்காரர்கள் செங்கட்டிகளை வீசியதால், அவர்கள் வந்த படகு கவிழ்ந்தது என்றும் அறிவிக்கப்படுகிறது.

பொலிசார் மீதும் அவர்கள் செங்கற்களை வீசினர்கள். பொலிசார் தடியடிப் பிரயோகமும், கண்ணீர்ப்புகைப் பிரயோகமும் செய்தனர்.

கலகக்காரர்கள் பயங்கர ஆயுதங்களுடன் பல இடங்களில் வேலைநிறுத்தக்காரர்களை தாக்கியதாயும் இதன் விளைவாக ஏராளமானேர் காயமடைந்ததாயும், சிலர் இதனல் பின்பு ஆஸ்பத்திரியில் இறந்ததாயும் அறிவிக்கப்பட்டது.

ரஸ்தாக்களுக்குத் தடை அமைத்த தொழிலாளர்கள் பின் வீதிகளிலிருந்த கடைகளைக் கொள்ளையடித்து அவற்றுக்குத் தீ மூட்டினர்கள். ஒரிடத்தில் 4 பிரேதங்கள் கண்டெடுக்கப்பட்டன.

வேலைநிறுத்தக்காரர்கள் பொலிசாரைச் சுற்றி வளைத்துக் கொண்டு தாக்கியதால் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

சுமார் 370-க்கு மேற்பட்டோர்கைதுசெய்யப்பட்டனர்.

# கன்சர்வேட்டிவ், தொழிற்கட்சி, லிபரல் கட்சி

## பிரிட்டிஷ் தேர்தல்

லண்டன், அக். 15

தொழிற்கட்சியினர் அதிக நம்பிக்கை கொள்வது சில வேளை தோல்வியையும் ஏற்படுத்தும் என பிரிட்டிஷ் தொழிற்கட்சித் தலைவர் திரு ஹரோல்ட் வில்சன் கூறினர்.

லிவர் பூல் நிருபர் மகாநாட்டில் அவர் பேசியபோது, முழு வாக்குகளும் எங்களுக்குக் கிடைத்தால் நாங்கள் வெற்றிபெறுவோம் என்றும் கூறினர்.

மிக அதிக வாக்குகள் எங்களுக்குக் கிடைக்கும் என அறிகுறிகள் தென்படுகின்றன. ஆனல் ஏற்கனவே வெற்றி பெற்றுவிட்டதாக நாம் நினைப்பது தோல்வியில் முடிந்ததாயும் முடியலாம்" என்ருர் வில்சன்.

தொழிற்கட்சி வெற்றிபெறும் என்ற பொதுஜன கணிப்பு, இக்கட்சிக்கு அதிக நம்பிக்கை ஏற்படுத்தியிருப்பது குறித்தே வில்சன் இவ்வாறு எச்சரித்தார்,

பிரிட்டிஷ் பிரதமரான சர் அலெக் டக்ளஸ் ஹியூம் ஒலிபரப்பில் பேசியபோது மாஸ்கோவில் தான் கையெழுத்திட்ட அணுசோதனைத் தடை ஒப்பந்தத்தின் விளைவுகளை பிரிட்டிஷ் மக்கள் அறிவார்கள் என்றும், மேற்கு நாடுகளுக்கும் சோவியத் யூனியனுக்குமிடையே நெருக்கடி குறைந்திருப்பதாயும் குறிப்பிட்டார்.

"ஆனல் உலகம் இன்றும் அபாயநிலையில் இருக்கிறது! பிரான்ஸ், சீன ஆகிய நாடுகள் அணுவல்லரசாக உருவெடுத்து வருகையில் சோஷலிஸ்டுகள் பிரிட்டிஷ் அணுஆயுதம் பற்றி மாற்றுக் கருத்துக் கொண்டிருக்கிருர்கள். பெரிய விஷயங்கள் விவாதிக்கப்படும்போது பிரிட்டிஷ் பிரதம மந்திரி இன்று ரஷ்ய, அமெரிக்கத் தலைவர்களுடன் சமமாக அமர முடிகிறது. பிரிட்டிஷ் பிரதமர் அப்படித்தான் இருக்க வேண்டும்" என்றும் சர் ஹியூம் கூறினர்,

கடந்த பார்லிமெண்டில் 7 எம்.பி.க்களைக் கொண்டிருந்த லிபரல் கட்சி, பிரிட்டனில் பலம்பொருந்திய மூன்ருவது கட்சியாக இருக்கவேண்டுமென வற்புறுத்திவருகிறது.

ஆனல் கன்சர்வேட்டிவ் கட்சித் தலைவர் பிளேக்கன் ஹாம் பிரபு, யார் ஆட்சி செய்ய வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் பிரிட்டிஷ் மக்கள் கன்சர்வேட்டிவ், அல்லது தொழிற்கட்சிக்கு மட்டுமே வாக்களிக்கவேண்டும் என்றும் லிபரல் கட்சிக்கு வாக்களிப்பது சேற்றுக்குள் முகத்தைப் புதைப்பதாகும் என்றும் கூறியிருக்கிறார்.

# வியட்னுமில் 1250 பேர் பலி

சைகோன், அக். 15

நேற்று தென்வியட்னும் அரசாங்கத்துருப்புக்களுக்கும், வியட்காங் கொரில்லாக்களுக்குமிடையே நடைபெற்ற சண்டையில் இதுவரை ஏற்பட்டாத அளவு சேதம் அரசாங்கத் துருப்புக்களுக்கு ஏற்பட்டதாய்க் கூறப்படுகிறது.

925 அரசாங்கத் துருப்புக்கள் கொல்லப்பட்டனர் என்றும், 325 வியட்காங் கொரில்லாக்கள் கொல்லப்பட்டனர் என்றும் அறிவிக்கப்படுகிறது.

# 'கியூபா-யு.எஸ். பிளவு அகல வேண்டும்'

## — பென்பெல்லா

அல்ஜியர்ஸ், அக். 15

அமெரிக்காவுக்கும் கியூபாவுக்குமிடையே ஏற்பட்டுள்ள பிளவை அகற்ற இப்போது தருணம் வந்திருக்கிறது என அல்ஜீரிய ஜனதிபதி பென் பெல்லா கூறினர்.

இங்கு விஜயம் செய்திருக்கும் கியூபா ஜனதிபதி ஒஸ்வால்டோபோர்டிகலைஸகௌரவிக்குமுகமாக நடைபெற்ற அரசியல் கூட்டத்தில் திரு. பென்பெல்லா மேலும் பேசுகையில் இந்தப்பிளவை அகற்றுவது இருநாடுகளுக்குமே நன்மை அளிக்கும் எனக் கூறினர்.

தனது ஆட்சி எப்படி இருக்க வேண்டும் என்பதை தீர்மானிக்க கியூபாவுக்கு உரிமை உண்டு என்பதை அமெரிக்கா உணர வேண்டும் என்றும் கியூபா அமெரிக்காவுக்கு ஒரு அபாயமாக விளங்குகிறது என்பதை எவரும் நம்பவில்லை என்றும் அவர் மேலும் கூறினர்.

# கோல்ட்வாட்டருக்கு ஆதரவு குறைகிறதாம்

சென் அந்தோனியோ, அக்.15

அமெரிக்க தென் மாகாணங்களில் செனட்டர் கோல்ட்வாட்டருக்குள்ள ஆதரவு வீழ்ச்சியடைந்து வருவதாய், டெக்ஸாஸ் கவர்னர் ஜோன்கொனல்லி (ஜனநாயகக் கட்சி) கூறினர்.

தனக்குத் தெரிந்தவரை மிஸிஸிப்பி' அலபாமா லூஸியானு, புளோரிடா ஆகிய நான்கு மாகாணங்களில் தான் ஜனதிபதி ஜோன்ஸனைவிட கோல்ட்வாட்டருக்கு அதிக ஆதரவு இருக்கிறது என்றும் அவர் கூறினர்.

# நாஸருக்கு அழைப்பு

கெய்ரோ, அக். 15

சைப்ரஸுக்கு விஜயம் செய்யுமாறு ஜனதிபதி மக்காரியோஸ், ஐக்கிய அராபியக் குடியரசுத் தலைவர் நாஸரை அழைத்திருக்கிருர். ஜனதிபதி நாஸர் இந்த அழைப்பை ஏற்றுக்கொண்டிருக்கிருர். யூகோ அதிபர் டிட்டோ தாயகம் திரும்பும் வழியில் சைப்ரஸுக்கு விஜயம் செய்வார் என்றும்அறிவிக்கப்பட்டது. நேற்று டிட்டோவும், நாஸரும் பேச்சுவார்த்தைகள் நடத்தியதாக அறிவிக்கப்படுகிறது.

# இந்திய வீரர் கடத்தப்பட்டார்

புதுடில்லி, அக். 15

திரிபுராவில், பாகிஸ்தான் எல்லை காவற்படையினர், இந்திய ரோந்து வீரர் ஒருவரை நேற்று கடத்திச் சென்றுவிட்டதாக அறிவிக்கப்பட்டுளது. கடத்தப்பட்ட வீரரை அனுப்பிவைக்குமாறு திரிபுரா அரசாங்கம் கிழக்கு பாகிஸ்தான் அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

# அடுத்த பொதுச்சபையை எதிர்நோக்கும் பெரியநெருக்கடி

## ரஷ்யாவின் பிடிவாத விளைவு

நியூயோர்க், அக். 15

சோவியத் யூனியன் தற்போதைய போக்கிலிருந்து நகராவிட்டால் அடுத்த நவம்பர் 10-ம் திகதி ஆரம்பமாகும் ஐ. நா. பொதுச்சபைக் கூட்டத்தில் ஐ. நா. நிதி நெருக்கடி உச்சக் கட்டத்தை அடையும் எனத் தெரிகிறது.

மத்திய கிழக்கிலும், காங்கோவிலும் ஐ. நா. படை நடவடிக்கைக்கான செலவில் சோவியத் யூனியன் தனது பங்கைச் செலுத்த தொடர்ந்து மறுக்குமானல், ஐ. நா. சாஸனத்தின் 19-வது பிரிவின் படி சோவியத் யூனியன் பொதுச் சபை வாக்குரிமையை இழக்க நேரிடும்.

இரண்டு வருடம் பாக்கிப் பணத்தைச் செலுத்தாத ஒரு நாடு, பொதுச் சபையில் வாக்களிக்கும் உரிமையை இந்த விதி பறிக்கிறது. சோவியத் யூனியனும், சோவியத் சார்பு நாடுகளும் இவ்வித பாக்கியை வைத்திருப்பதால், வேறு சில நாடுகளும் பாக்கியைச் செலுத்தும் கடமையில் தவறி வருகின்றன.

சோவியத் யூனியன் தன் பாக்கியைச் செலுத்தாவிடில் அதனல் ஏற்படும் விளைவு என்னவெனில் ஒரு மாபெரும் வல்லரசு ஐ. நா. வில் வாக்குரிமையை இழக்க நேரிடும் என்றும், இதனல் ஐ. நா. பலவீனமடையும் என்பதுமே.

ஐ. நா. வுக்கு இப்போது 13 கோடியே 40 லட்சம் பவுண் கடன் இருக்கிறது.

ஒலிம்பிக்

# அமெரிக்காவுக்கு 7 தங்கப்பதக்கம்

டோக்கியோ, அக். 15

நேற்றுவரை டோக்கியோ ஒலிம்பிக்கில் பலநாடுகளுக்குக் கிடைத்த தங்கப்பதக்கங்களில் அமெரிக்கா முதலிடம் வகிக்கிறது. ரஷ்யாவுக்கு 2-வது ஸ்தானம். அமெரிக்காவுக்கு 7-ம், ரஷ்யாவுக்கு 4-ம், ஜப்பானுக்கு 4-ம், பிரிட்டனுக்கு 1 மாக தங்கப்பதக்கங்கள் கிடைத்திருக்கின்றன.

ஹாக்கி "ஏ" பிரிவில் ஆஸ்திரேலியாவுக்கு முதல் ஸ்தானமும், பாகிஸ்தானுக்கு இரண்டாவது ஸ்தானமும் கிடைத்திருக்கின்றன.

"பி" பிரிவில் ஜெர்மனிக்கு முதலிடமும், ஸ்பெயினுக்கு இரண்டாவது இடமும், இந்தியாவுக்கு மூன்ருவது இடமும் கிடைத்திருக்கின்றன.

# துங்குவை அணுகும் சுகர்ணே

கோலாலம்பூர், அக். 15

பேச்சுக்கள் நடத்த வருமாறு இந்தோனேஷிய அதிபர் சுகர்ணே கடந்த இரு வாரத்தில் மூன்றுதடவைகள் தம்மை அணுகியிருப்பதாக மலேசிய பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் தெரிவித்துள்ளார் அவர் இதுவரை 6 தடவைகளில் தம்மை அணுகியிருப்பதாகவும் முதலில் இந்தோனேஷிய கொரில்லாக்கள் தமது மண்ணிலிருந்து வெளியேறவேண்டுமென்றும் பிரதமர் துங்கு தெரிவித்துள்ளார்.

# மின்னலுக்கு மூவர் பலி

சென்னை, அக். 15

சென்னையின் ஒரு பகுதியில் நேற்று மின்னல் தாக்கியதில் ஒரு சிறுவன் உட்பட மூவர் பலியானுர்கள். சிலர் படுகாயமடைந்துள்ளனர், குறிப்பிட்ட பகுதியில் பலத்த மழை பெய்துகொண்டிருக்கிறது.

# ஜோன்ஸன்

வாஷிங்டன், அக். 15

அமெரிக்க ரஷ்ய உறவை அபிவிருத்தி செய்யத் தாம் பாடுபடப்போவதாய் ஜனதிபதி ஜோன்ஸன் கூறியிருக்கிருர். திரு. குருஷ்சேவ் சென்றமுறை அமெரிக்காவுக்கு வந்த பின்பும், பாரிஸில் தோல்வியுற்ற உச்சி மகாநாட்டுக்குப் பின்பும் இப்போது நிலைமை வெகுவாக அபிவிருத்தியடைந்திருப்பதாய் அவர் கூறினர். அமெரிக்காவில் நிறபேதம் கூடாது என்றும்இது அபாயத்தை படுத்தும் என்றும் அவர்கூறினர்.

பண்டைய நாகரிகம்கொண்ட கீழ்த்திசை நாடுகளை கம்யூனிச ஆபத்திலிருந்து பாதுகாப்பதில் அமெரிக்கா திட உறுதி கொண்டிருக்கிறது என்றும் அவர் கூறினர்.

# பாடங்களில்மாற்றம்

ஜாஎலை. வியாழன்

'அடுத்த வருடத்திலிருந்து ஆரம்ப வகுப்புகளில் விவசாயம்,பொது விஞ்ஞானம் ஆகிய பாடங்களுடன் அட்சரகணிதமும் கட்டாய பாடமாக்கப்படும்' என வித்தியாதிபதி திரு. ஈ. எச். டி' அல்விஸ் ஜாஎலை ஆர். சி. கலவன் பாடசாலையில் நடைபெற்ற கூட்டமொன்றில் தலைமை வகித்து பேசுகையில் கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

மூன்று வருடங்களுக்குப் பின் பாடசாலைகளில் இப்போது போதிக்கப்பட்டுவரும் சகல பாடங்களிலும் மாற்றங்கள் ஏற்படுத்தப்படும். அத்துடன் மாணவர்கள் குறைந்தவிலையில் புத்தகங்கள் வாங்கக்கூடியதாக இருக்கும்.

# 4-ம் திட்டம் 21500 கோடி

## மந்திரிசபை அங்கீகாரம்

புதுடில்லி, அக். 15

4-ம் ஐந்தாண்டுத் திட்டத்தின் பூர்வாங்க மதி[...] 21,500 கோடி ரூபா[...] திய மந்திரிசபை அ[...] திருக்கிறது. மேலு[...] கோடி ரூபாய் சில [...] களுடன் திட்ட[...] கப்படும் என அ[...] டது. தனியார் [...] கோடி ரூபாய[...] கப்பட்டிருக்கி[...]

# பத்திரிகை மசோ[...] நிலிம் எதிர்ப்பு

கண்டி, வி[...]

'உத்தேச பத்தி[...] மசோதா முற்றிலும் அ[...] னது' என எம். பி. [...] வர் இலங்கைப் பல்கலைக் [...] கத்தில் நிகழ்த்திய சொற்பொ[...] ழிவின் போது குறிப்பிட்டார்.

இலங்கை பல்கலைக் கழகத்தின் அரசியல் சாஸ்திரக் கழகத்தினல் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் பேசுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. குணவர்த்தன மேலும் பேசுகையில் கூறியதாவது.-

' 9 வங்கிகளும் தோட்டங்களும் ஏஜன்சிக்களும் தேசியமயமாக்கப்பட இருக்கின்றன. இவற்றைத் தேசியமாக்கப்படு முன் பத்திரிகைகளைத் தேசியமயமாக்க அரசாங்கம் திட்டமிடுகிறது.

எந்த ஒரு பத்திரிகையையாவது அரசாங்கம் எடுத்துக் கொள்வதற்கு அவர் கடுமையான ஆட்சேபம் தெரிவித்தார்.

## நவராத்திரி விழா

சழிபுரம், வியாழன்

மாதகல் துணைசை நிலையத்தாரின் சார்பில் பாரதி வாசிகசாலை மண்டபத்தில் நவராத்திரி விழா கொண்டாடப்பட்டது. ஆசிரியர் திரு. மு. ஓங்காரசோதி விழாவுக்குத் தலைமைவகித்தார் திரு. மு. சிவானந்தம், திரு. அ. துரைரத்தினம் ஆகியோர் விசேட சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். செல்வி ஏ. செல்வராணியின் இன்னிசைக் கச்சேரியும் விழாவில் இடம்பெற்றது.

∴ ∴ ∴

யாழ்ப்பாணம், வெள்ளி

இ. போ. சபையின் வட பிராந்திய தலைமைகாரியாலயத்தில் நேற்று முதன்முறையாக அங்கு கடமையாற்றும் ஊழியர்களால் வெகுசிறப்பாக கலைமகள் விழா கொண்டாடப்பட்டது.

∴ ∴ ∴

யாழ்ப்பாணம், வெள்ளி

கந்தர் மடம் அருள் நெறிக் கழகம் நேற்று ஸ்ரீ கந்தப்புராண மண்டபத்தில் விஜய தசமி விழாவைக் கொண்டாடியது.

மாலை 5 மணியளவில் நடைபெற்ற இவ்விழாவில் கவியரங்கமும் கதாப்பிரசங்கமும் இசைக்கச்சேரியும் இடம்பெற்றன.

## வேலைநிறுத்த எதிரொலி

கொழும்பு, வியாழன்

1948-ம் ஆண்டு நடைபெற்ற அரசாங்க ஊழியர் வேலைநிறுத்தத்தின் எதிரொலியை நேற்று திறைசேரியில் கேட்கக்கூடியதாகவிருந்தது.

வேலைநிறுத்தத்தில் பங்குபற்றியதன் காரணமாக வேலைநீக்கம் செய்யப்பட்ட அல்லது கட்டாய ஓய்வுபெற்ற ஊழியர்களுக்கு சம்பளம் வளங்கப்பட்டதா என்பதுபற்றியும் குறிக்கப்பட்ட காலத்தில் அவர்களுக்குச் சேரவேண்டிய தொகைபற்றியும், திரும்பவும் அவர்களை வேலைக்கமர்த்திய திகதிபற்றியும் அறிவிக்குமாறு எல்லா அரசாங்க இலாகாத் தலைமைக் காரியாலயங்களையும் திறைசேரி கேட்டுள்ளது. ஏற்கனவே சம்பளத் ... வழங்கப்படாதவர்க ... ம்பளம் கொடுக்க ... தொகை தேவைப் ... துபற்றியும் திறை ... ுள்ளது.

... ஊழியர்களின் 21 ... ல் 15-வது ... நிறைவேற்றுவ ... ப்படி கடவடி ... பட்டதாகத் ... வேலைநிறுத் ... அல்லது தொ ... டிக்கை சம்பந் ... நீக்கம் செய்யப் ... களை அல்லது கட் ... வுபெற்றவர்களை மீண் ... லையில் சேர்க்கும்படி ... ர்கள்மீது விதிக்கப் ... ள தண்டனைகளை நீக் ... யும் 15-வது கோரிக்கை ... கிறது.

—

## பௌர்ணமி தின விடுமுறை

### வர்த்தக நிலையங்கள் முடிவு செய்யவில்லை

கொழும்பு, வியாழன்

எல்லா பௌர்ணமி தினங்களிலும் விடுதலை விடுவது பற்றி வர்த்தக நிலையங்கள் இதுவரை எதுவித முடிவும் செய்யவில்லை. பௌர்ணமி தினங்களில் விடுதலை விடுவது பற்றிய அரசாங்கத்தின் தீர்மானத்தை அரசாங்கம் எப்படி செயல்படுத்தும் என்பதை அறிந்த பின்பே வர்த்தகப் பகுதியினர் முடிவு செய்வார்கள்.

தனிப்பட்ட வர்த்தக நிலையங்களில் சொந்தக்காரர்களும், தொழிற்சங்க வட்டாரங்

## இலக்கிய விழா

சழிபுரம், வியாழன்

யாழ்ப்பாண மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாஜமும், வலிகாமம் கிழக்கு உள்ளூராட்சி மன்றங்களும் இணைந்து கோப்பாய் ஆசிரிய கலாசாலை மண்டபத்தில் இலக்கிய விழாவொன்றை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச்செய்துவருகின்றன. விழா எதிர்வரும் 24-ம் தேதி சனிக்கிழமை நடைபெறும்.

இவ்விழாவில் உள்ளூராட்சி ஆணையாளர் திரு. டபிள்யூ. டி. வி. மகாதந்திலா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

## புகையிரத என்ஜின் தடம்புரண்டது

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் நேற்றுக் காலை என்ஜின் ஒன்று தடம்புரண்டது. இதன்காரணமாக 2 மணித்தியாலங்கள் வரை வழக்கமாக செல்லும் புகையிரதங்கள் தாமதித்தன.

227-ம் நம்பரையுடைய என்ஜின், யாழ்ப்பாணம் புகையிரதநிலையத்தில் சாமான் பெட்டிகளை இழுத்துவரும் பொழுதே இச் சம்பவம்நிகழ்ந்தது. என்ஜின் முதல் நான்கு சில்லுகளும், தண்டவாளத்தை விட்டு கீழே இறங்கிவிட்டதால், பழையநிலைக்கு கொண்டுவருவதற்கு புகையிரத தொழிலாளர்கள் சுறுசுறுப்பாக பணியாற்றினர்கள்.

## பாரதி விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

சுன்னாகம் நாவலர்மன்ற ஆதரவின்கீழ், வரும் சனிக்கிழமை மாலை 5-30 மணியளவில் சுன்னாகம் புகையிரத நிலையத்துக்கு அருகாமையிலுள்ள மைதானத்தில் பாரதிவிழா நடைபெறவிருக்கிறது.

திரு. ஆ. தம்பிப்பிள்ளை தலைமையில் நடைபெறவிருக்கும் இந்தவிழாவில் பல அறிஞர்கள் சொற்பொழிவாற்றவிருக்கிறர்கள்.

## கூட்டுவழிபாட்டுசபை ஆண்டுவிழா

யாழ்ப்பாணம், வெள்ளி

சுன்னாகம் மயிலணிச் சிவன் கோவில் கூட்டு வழிபாட்டுச் சபையின் நான்காவது ஆண்டு விழா இன்று மாலை அகில இலங்கை இந்துமாமன்றத் தலைவர் சேர் கந்தையா வைத்தியநாதன் தலைமையில் மாலை 6 மணிக்கு நடைபெறவிருக்கிறது.

விழாவில் திரு. மு. ஞானப்பிரகாசம் 'கூட்டுவழிபாடு' என்னும் பொருள்பற்றி உரை நிகழ்த்துவார்.


ஒரு ஆரோக்கிய குழந்தையும் ---குதூகலிக்கும் தாயும்



...நன்றி லக்டோஜனுக்கே


உலகப் புகழ்பெற்ற குழந்தைகளுக்கான முழு ஆடைப் பால் உணவான லக்டோஜனில் இப்பொழுது ஒன்பது மேலதிக விட்டமின்களும் இரும்புச் சத்தும் அடங்கியுள்ளது. பலம் ஊட்டப்பட்ட இந்த விட்டமின்களால் லக்டோஜன் மனதுக்கு நிம்மதியைக் கொடுக்கிறது— உங்கள் குழந்தை திடமாகவும் ஆரோக்கியமாகவும் வளருவதைக் கவனியுங்கள். தாய்ப் பால் இல்லாவிட்டால்......லக்டோஜனை நாடுங்கள். அது உங்களுக்கு நம்பிக்கை அளிக்கும்.

| | |
|---|---|
| விட்டமின் A | கல்சியம் பன்டோதினேட் |
| விட்டமின் B | விட்டமின் $B_{12}$ |
| விட்டமின் $B_2$ | விட்டமின் C |
| விட்டமின் PP | விட்டமின் D |
| விட்டமின் $B_6$ | இரும்பு |

நீங்கள் லக்டோஜனை



# அவை பல்கிப் பெருகுகின்றன



ஆயினும் அவை ஆரோக்கியமாக வளர்வதற்கு, உங்கள் கால்நடைகளுக்கு இந்தப்புதிய, முற்றிலும் சமன் செய்த, உயரிய போஷாக்கம்சம் செறிந்த தீனேயே நிச்சயமாக ஊட்டுங்கள்.

## ஹைவிட்டா மீல்

ஹைவிட்டா மீல் என்னும் தீனில் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு வேண்டிய எல்லாச் சிவசத்துக்களும் தாதுப்பொருள்களும் அடங்கியிருக்கின்றன; அத்தோடு அது இலகுவாகச் சுவறி, சுலபமாகச் சீரணமாகிறது. அதி நவீன, பக்குவ முறைப்படி கட்டுப்பாடான நிலைமைகளில் ஆரோக்கியமான விதத்தில் அது தயாரிக்கப்படுகிறது; நெடுங் காலத்துக்குக் கெட்டுப் போகாமல் இருக்கக்கூடிய சிறப்பம்சங்கள் கொண்டது.

ஹைவிட்டா மீல், உங்கள் பண்ணை உயிரினங்களை உன்னத நிலையில் போஷிப்பதற்கேற்ற அதி சிக்கனமான தீனுகும்.

**ஹைவிட்டா உற்பத்திப் பொருள்கள்**

ஜா - எல மில்ஸ், ஜா - எல.

தொலைபேசிகள்: ஜா - எல 216, கொழும்பு 5767.


## யாழ்ப்பாண மாநகரசபை

### கேள்விப்பத்திர அறிவித்தல்

1. குருநகர் வீடமைப்புத் திட்ட குழி மலகூடங்களில் உள்ள அசுத்தத்தை அப்புறப் படுத்துவதற்கு முத்திரையிடப்பட்ட இரு பிரதிகளுடன் கூடிய கேள்விப்பத்திரங்கள் 23-10-64-ந் திகதி பிற்பகல் 3-00 மணி வரைக்கும் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்வி விண்ணப்பப் பத்திரங்கள் 20-10-64-ந் திகதி பிற்பகல் 3-00 மணி வரை மாநகரசபைசுகாதாரவைத்திய அதிகாரியிடமிருந்து ரூ. 5-00 கேள்விப்பத்திரத்தின் பெறுமதியாகவும், ருபா 50-00 கேள்விப் பிணைப்பணமாகவும் கட்டி பெற்றுக்கொள்ளலாம்

கேள்விப்பத்திரத்தின் பெறுமதியான ரூ 5-00 திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் மாநகர சபையுடன் வேலைப்பொருத்தத்தை ஏற்று உடன்படிக்கை எழுதியபின்பு கேள்விப் பிணைப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

3. கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும்போது கேள்வியில் பங்கு கொள்வோர் சமூகமளிக்க அனுமதிக்கப்படுவர். 1-ம் பந்தியில் குறிப்பிட்ட நேரத்தில் மாநகரசபை ஆணையாளரது அலுவலகத்தில் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும்.

4. மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரியிடமிருந்து தேவையான மற்றும் விபரங்களை கந்தோர் நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

ஒப்பம்: டி. டி. ஜேயசிங்கா,
ஆணையாளர்,
யாழ். மாநகரசபை.

945

## டிறிபேர்க் கல்லூரி சாவகச்சேரி

இக் கல்லூரியில் சேர விரும்புவோர் (6-ம் வகுப்புத் தொடக்கம் மேல்வகுப்புகளுக்கு) 21-10-64க்கு முன்னைக்கு மனுச் செய்யவும். மனுப்பத்திரங்களைப் பாடசாலை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஜே. வ. தம்பிநாயகம்
12-10-64 அதிபர்

944

## ஒரு விளம்பரம்

அனுபவம் வாய்ந்த சீன நிபுணரால் இயற்கை அமைப்புக்கேற்ப பற்களைக் கட்டுவதற்கு உகந்த இடம் யாழ்ப்பாணத்தில் இது ஒன்றே. கண் பார்வை பரிசோதனை செய்தும், டாக்டரினல் சிபார்சு செய்த கண்ணாடிகள் அழகிய பிரேம்களில் சகாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம். எஸ். எம். பெர்னண்டோ, வீரநாணவீதி, முதலாம் குறுக்குத் தெரு சந்தி, யாழ்ப்பாணம். 895

## விற்பனைக்கு

ஆனையிறவு செல்வன் கபே என்னும் கடைகள் நாலும், காணி எட்டுப் பரப்பும் விற்பனைக்கு இருக்கின்றன. விலை நேரில் அறியலாம். ம. ச. குமர சண்முகம், சிவியாதெரு, உப்பளம், கைதடி. 1021

## தமிழன் ...

(2-ம் பக்கத்தொடர்ச்சி)

வர்கள் மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ள எண்ணிக்கையை எண்ணும்பொழுது எங்களுக்குச் சிறந்து பெருமையாக இருந்தாலும், இனிவரும் ஆண்டுகளில் இதிலும் பலமடங்கு எண்ணிக்கையுள்ள மாணவர் தோன்றவேண்டும்.

# 2வது கிரிக்கெட் டெஸ்டில் ஆஸ்திரேலியா வீழ்ந்தது!

## 2 விக்கெட்டுகளால் இந்தியா வெற்றி

பம்பாய், அக். 15

ஆஸ்திரேலியாவுக்கும், இந்தியாவுக்குமிடையே இங்கு நடைபெற்ற இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட்டில் இந்தியா மகத்தான வெற்றியீட்டியுள்ளது. இந்தியா 8 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு மொத்தம் 256 ஓட்டங்கள் எடுத்து ஆட்டம் முடிவடைவதற்கு 32 நிமிடங்களுக்கு முன்னதாகவே விளையாட்டை நிறுத்திக்கொண்டது.

இரண்டாவது டெஸ்ட்டில், இந்தியா வெற்றியீட்டுவதற்குப் பட்டோடியும், மஞ்சரிகரும் தான் காரணம் என்று சொல்லலாம். சோர்வடைந்திருந்த கிரிக்கெட் ரசிகர்களைத் தட்டியெழுப்பி, இந்தியக் கோஷ்டியை முன்னுக்குக் கொண்டுவந்ததற்கு இவர்களிருவரின் கூட்டு விளையாட்டே முழுக் காரணமாக இருந்தது. பட்டோடி 53 ஓட்டங்களும், மஞ்சரிகர் 39 ஓட்டங்களும் எடுத்திருக்கின்றனர். சர்தேசாய் 56 ஓட்டங்கள் எடுத்துத் தனது கோஷ்டியின் தரத்தை ஓரளவு உயர்த்தியிருக்கிறார். இந்தியக் கோஷ்டியின் கடைசி ஜோடிகளாகப் போர்டேயும், இந்திரஜித்சிங்கும் ஆட்டம் இழக்காமல் முறையே 26 ஓட்டங்களும் 03 ஓட்டங்களும் பெற்றிருந்தனர்.

ஆஸ்திரேலியாவின் சார்பில் மக்கன்ஸியும், ஸிம்ஸனும் திறமையாக விளையாடியிருக்கின்றனர். அதேபோல் இந்தியப் பந்தெறி வீச்சுக்காரர்களான நட்கார்ணி, சந்திரசேகர் ஆகியோரின் பந்தை எதிர்த்து விளையாடுவதில் ஆஸ்திரேலியா சிறிது கஷ்டமடைந்திருக்கிறது என்பது தெளிவு. அடுத்ததும் கடைசியுமான கிரிக்கெட் டெஸ்ட் கல்கத்தாவில் நடைபெறும்.

---

## 30 பேர் பலி

டாக்கா, அக். 15

கிழக்கு பாகிஸ்தானிலுள்ள குல்ஞவில் தொழிலாளர் இரு பிரிவுக்கிடையே நடைபெற்ற கலகத்தில் 30 பேர் மாண்டனர் என்றும், 400 க்கதிகமானோர் கைதாயினர் என்றும் அறிவிக்கப்பட்டது.

---

## பாம்பு கடித்து கி. ச. அங்கத்தவர் மரணம்

கோப்பாய் புதன்.

மாந்தை வடக்கு கிராம முன்னேற்றச் சங்க அங்கத்தவரான விரகத்தி என்பவர் 'விரியன்' என்ற இனத்தைச் சார்ந்த பாம்பின் வாய்ப்பட்டு மரணமடைந்தார்.

REGAL — JAFFNA
NOW SHOWING
KIRK DOGLAS
in
TOWN WIHOUT PITY
(ADULTS ONLY)

அநேக ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க இன்னும் சில தினங்களுக்கு திரையிடப்படுகிறது!
ஸ்ரீ மனோகரா
(யாழ்ப்பாணம்) போன்: 485
பாலசர்மா டி. கே. பகவதி ஜெயஸ்ரீ விஜயலக்ஷ்மி மற்றும் பலர் நடித்த
சம்பூர்ண மகாபாரதம்

மங்களகரமான 3வது வாரம்!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
குயின்லன் (நுகெகொடை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) ராஜ் (நீர்கொழும்பு)
வெம்பிளி (கண்டி) விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணு (திருமலை)



எம். ஜீ. ராமச்சந்திரன் - சரோஜாதேவி
மற்றும் பலர் நடிக்கும்
பணக்கார குடும்பம்

## வேலைகள் பாதிப்பு

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாண மோட்டார் வாகனப் பரிசோதகர் கந்தோரில் இருந்த இரு எழுதுவினைஞர்களில் ஒருவரை மோட்டார் போக்குவரத்து அதிகாரி பொலநறுவாவிற்கு இந்த மாதம் தொடக்கம் மாற்றம் செய்ததன் காரணமாக, யாழ்ப்பாணம் மோட்டார் வாகனப் பரிசோதகர் கந்தோரில் வேலைகள் மிகவும் பாதிக்கப்பட்டதாகவும் அங்கு இருக்கும் ஒரு ஊழியர் திறம்பட தனது வேலைகளைச் செய்ய முடியாமல் இருப்பதாகவும் தெரிய வருகின்றது. இதுபற்றி அந்த இலாகாவுடன் அடிக்கடி தொடர்புகொள்ளும் பொது மக்கள் கொழும்பு தலைமைக் கந்தோர் அதிகாரிக்கு புகார் செய்துள்ளார்கள்.

---

## மண்வள வாரம்

கொழும்பு, புதன்

தேசிய மண்வள பாதுகாப்பு வாரம் இம்மாதம் 19-ம் திகதி ஆரம்பமாகின்றது. இது சம்பந்தமாக இலங்கை வானொலி பல விசேஷ நிகழ்ச்சிகளை ஒலிபரப்பும்.

---

## இரட்டைத் தட்டு.---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கையொன்றில் தெரிவித்துள்ளார்.

போக்குவரத்து மந்திரி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தபோது இ. போ. ச. மாவட்ட கந்தோரில் நடைபெற்ற இ. போ. ச. அதிகாரிகள், தொழிற்சங்கத் தலைவர்கள் அடங்கிய மகாநாடு ஒன்றின்போது வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் புதிய இரண்டு தட்டு பஸ்களில் 10 பஸ்களை யாழ்ப்பாணம் அனுப்புவதென வாக்குறுதியளிக்கப்பட்டதாகவும், இதன் பெயரில் வீதிகளில் உள்ள போக்குவரத்து தடைகளை அகற்றி, முதற்படியாக இரண்டு தட்டு பஸ் ஒன்றை மாவட்ட மனேஜர் இங்கு கொண்டுவந்தார் எனவும் திரு. தர்மரத்தினம் தமது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இப்பொழுது வெளிநாட்டிலிருந்து புதிய இரண்டு தட்டு பஸ்கள் கொழும்பு வந்து சேர்ந்திருப்பதாகவும் தமிழரசுத் தலைவர்களான திருவாளர்கள் எஸ். ஜே. வி. செல்வநாயகம், அ. அமிர்தலிங்கம் ஆகியோரின் ஆட்சேபத்தின் பேரில் இரண்டு தட்டு பஸ்களை இங்கு முன்னர் கூறியபடி அனுப்புவதில்லையெனத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக தங்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தமது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார்.

---

## மரண அறிவித்தல்

முத்துக்குமாரு

பொன்னையா

அனலைதீவுக் கிராமசபைத் தலைவரும், தீவுப்பகுதி மோட்டார் படகு போக்குவரத்துச் சேவைச் சங்கத்தின் தலைவரும், கனகம்மாவின் அன்புக் கணவரும், செம்புக்கட்டி, மாதம்பை தோட்டச் சொந்தக்காரரும், நிர்வாகஸ்தரும், காலஞ்சென்ற திரு. சுப்பையா, திருவாளர்கள் இராஜரத்தினம் (இளைப்பாறிய கிராம அதிகாரி, செம்புக்கட்டி), வைத்திலிங்கம், நடராஜன் (ஓவர்சியர், யாழ்ப்பாணம் சிறைச்சாலை), தில்லையம்பலம், திருமதிகள் நாகம்மா, விசாலாட்சி ஆகியோரின் சகோதரரும், திரு. திருநாவுக்கரசு அவர்களின் மைத்துனருமாகிய முத்துக்குமாரு பொன்னையா அவர்கள் நேற்று வியாழக்கிழமை சிவபதமடைந்துவிட்டார். அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் அனலைதீவு மயானத்தில் நடைபெறும்.

1025

# சந்தேக நபர் இருவர் நீதிமன்றத்தில் சரண்

யாழ்ப்பாணம், வியாழன்

கிளிநொச்சி இராமநாதபுரம் குடியேற்றப் பகுதியில், கடந்த வாரம் தந்தையைகொலைசெய்து 17 வயது மகளை கடத்திச் சென்ற சம்பவத்தில் சம்பந்தப்பட்டதாக கூறப்படும் சந்தேகநபர்களில் இருவர் நேற்று சாவகச்சேரி மாஜிஸ்திரேட் கோர்ட்டில் சரணடைந்தார்கள்.

சாவகச்சேரி மாஜிஸ்திரேட் கோர்ட்டில் நீதிபதி திரு. ஞெபார்ட் சில்வா முன்னிலையில் சந்தேக நபர்களில் இருவரும், சகோதரர்களுமான கதிரவேலு குணம் அல்லது குணசிங்கம், கதிரவேலு நடராசா நேற்று சரணடைந்தார்கள். அவர்களிருவரையும் ரிமாண்டில்வைக்கும்படிமாஜிஸ்திரேட் உத்தரவிட்டார்.

இம்மாதம் 5-ம் தேதி திங்கட்கிழமை இரவு 9 மணியளவில் கிளிநொச்சி இராமநாதபுரம் குடியேற்றப்பகுதியில் வசித்துவந்த ஆறுமுகத்தை (வயது 50) கொலைசெய்ததாகவும், அவரது 17 வயது மகள் பூரணத்தை காரில் கடத்திச்சென்றதாகவும், சந்தேக நபர்களில் ஒருவரான நடராசா, பூரணத்தைகெடுத்ததாகவும், இதைத்தொடர்ந்து பூரணம், கிராமசேவகரிடம் முறையிட்டதாகவும், இச்சம்பவம்பற்றிக்கூறப்படுகிறது.

கிளிநொச்சி சப்-இன்ஸ்பெக்டர் தேவசகாயமும், கிளிநொச்சி பொலிசாரும், இச்சம்பவம் பற்றி மேலும் விசாரணை செய்து வருகிறார்கள். இம்மாதம் 21-ம் தேதி சாவகச்சேரி கோர்ட்டில், சந்தேக நபர்களில்இருவரான நடராசாவும், அவரது சகோதரர் குணசிங்கமும் ஆஜராவார்கள்.

பூரணத்தை கடத்திச்செல்வதற்கு பாவிக்கப்பட்டதாகக் கூறப்படும் காரையும், கிளிநொச்சி பொலிசார் கண்டுபிடித்துவிட்டதாக அறியப்படுகிறது.

சங்கக் கடை

# மனேஜர் கொலை வழக்கு அப்பீல் தள்ளுபடி

## நால்வருக்கு மரணதண்டனை ஊர்ஜிதம்

கொழும்பு, வியா.

'சங்கக் கடை மனேஜர் கொலை வழக்கு அப்பீலை தள்ளுபடி செய்ததாக, கிரிமினல் அப்பீல் கோர்ட்டில் தீர்ப்பளிக்கும் போது நீதியரசர் ரீ எஸ். பெர்னாண்டோ கியூ. ஸி. தெரிவித்தார்.

இவ்வழக்கில் மட்டக்களப்பு பகுதியை சேர்ந்த சங்கக் கடை மனேஜர் அப்துல் ரஸித்தை கொலை செய்ததாக, மட்டக்களப்பு அசைஸ் நீதிமன்றத்தில், நால்வர் மீது குற்றம் சாட்டப்பட்டு, அந்த நால்வருக்கும் மரணதண்டனை விதிக்கப்பட்டது. இந்த மரணதண்டனையை எதிர்த்து கிரிமினல் அப்பீல் கோர்ட்டில் அப்பீல் செய்யப்பட்டது.

நீதியரசர்கள், ரீ. எஸ். பெர்னாண்டோ கியூ. ஸி., பி. ஸ்ரீஸ்கந்தராசா, ஜி. பி. டி' சில்வா ஆகியோர் முன்னிலையில் இவ்வழக்கு விவாதிக்கப்பட்டபின், அப்பீல் தள்ளுபடி செய்யப்பட்டு, அசைஸ் கோர்ட் தீர்ப்பு ஊர்ஜிதம் செய்யப்பட்டது.

1-ம், 3-ம், 4-ம் எதிரிகள் சார்பில் டாக்டர் கொல்வின் ஆர். டி' சில்வா, திரு. ஜே ஏ. பி. செரிபிம், செல்வி மனோரிடீ சில்வா, ஆகியோரின் உதவியுடன் ஆஜரானார். 2-ம் எதிரி சார்பில் திரு. ஏ. எச். இ. டி' சில்வா கியூ. ஸி. திருவாளர்கள் கே. சி. கமலநாதன், ஆர் பொடின கொட ஆகியோரின் உதவியுடன் ஆஜரானார்.

முடிக்குரிய தரப்பில் உதவி சொலிஸிட்டர் ஜெனரல் திரு. வி. தாமோதரம், திரு. ரஞ்சித் அபயசூரியாவின் உதவியுடன் ஆஜரானார்.

---

## சந்தேகநபர் கைது

மாவிட்டபுரம், புதன்

காங்கேசன்துறை தொழிற்சாலையில் கொந்தராத்து வேலை செய்யும் மாத்தறையைச் சேர்ந்த எம். எச். குணசேகரா என்பவருக்குச் சொந்தமான கிரேசரின் 3000 ரூபாய் பெறுமதியான உறுப்புக்களை, குணசேகராவின்கீழ் வேலை செய்து வந்த கொஸ்வத்தையைச் சேர்ந்த உப்பாளி சில்வா என்பவர் களவாடிச் சென்றுவிட்டதாக காங்கேசன்துறைப் பொலிஸில் செய்யப்பட்ட புகாரைத் தொடர்ந்து காங்கேசன்துறை பொலிஸைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தரான திரு. த. குழந்தைவேலு உப்பாளி சில்வாவைக் கைது செய்ததுடன் களவு போகப்பட்டதாக கருதப்படும் பொருட்களையும் கைப்பற்றியுள்ளார். உப்பாளி சில்வா இம்மாதம் 16ந் தேதிவரை ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

---

## ஒலிம்பிக் போட்டி

டோக்கியோ, அக். 15

இன்று டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் 100 மீட்டர் ஆண்களுக்கான ஓட்டப்போட்டியில் அமெரிக்காவைச் சேர்ந்த பரப்ஹோய்ஸ் என்ற நீக்ரோ 10 விநாடிகளில் அதைக் கடந்தார்.

இன்று அமெரிக்கா, ரஷ்யா ஹங்கேரி உட்பட பலநாடுகள் 5 தங்கப்பதக்கங்களைப் பெற்றன. இதுவரை அமெரிக்காவுக்கு 9 தங்க மெடல்களும் ரஷ்யாவுக்கு 5 தங்க மெடல்களும் கிடைத்திருக்கின்றன.

இன்று நடைபெற்ற ஹாக்கி போட்டி விபரம் வருமாறு

'இந்தியா' ஹாங்காங்கை 6-0 கோல்களாலும் கென்யா ஆஸ்திரேலியாவையும், பாகிஸ்தான் பிரிட்டனை 1-0 கோலாலும், ஜப்பான் நியூஸிலந்தை 1-0 கோலாலும், ஹாலந்து பெல்ஜியத்தை 4-0 கோல்களாலும், ஸ்பெயின் கனடாவை 3-0 கோல்களாலும் தோற்கடித்தன.

---

## தமிழிசை விழாவுக்கு ஆசிச் செய்தி

கொழும்பு, வியாழன்

கொழும்பு விவேகானந்தா சபையின் வருடாந்த தமிழ் இசை விழாவுக்கு இலங்கையிலுள்ள இஸ்ரேல் ஸ்தானிகர் திரு. எஸ். ரமடி அனுப்பியுள்ள ஆசிச்செய்தியில் விவேகானந்தா சபை கலாசார வளர்ச்சியில் எடுத்துள்ள ஆர்வம் குறித்து தமது பாராட்டைத்தெரிவித்துள்ளார்.

---

## சிறுபான்மையோரின் 'பிரஜாஉரிமை' கஷ்டங்கள்

கொழும்பு, வியா.

சிறுபான்மை சமுகத்தவருக்கு எதிராகவுள்ள பிரஜா உரிமை சட்டங்களை பின்பற்றினால் இலங்கையின் ஜனத்தொகையில் பாதிப்பேர் தங்களை இலங்கை பிரஜை என நிரூபிக்கமாட்டார்கள். ஏனெனில் ஒருவர் தனது தகப்பனின் பிறப்பு சார்டிபிக்கட்டை மட்டுமின்றி பாட்டனரின் பிறப்பு சார்டிபிக்கட்டையும் சமர்ப்பிப்பதென்பது முடியாத காரியம் என்று பிரஜா உரிமை கமிட்டிமுன் நேற்று சாட்சியமளித்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தூதுகோஷ்டி தெரிவித்தது.

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 64-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 16-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது